# மனித உரிமைகளும் பெண்கள் உரிமைகளும்

“பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறை”யை அடிப்படையாகக் கொண்டு 16 நாட்கள் பூராவும் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதிநாள் டிசம்பர் 10ம் திகதியாகும். ஆண்டு தோறும் இந்நிகழ்ச்சி சம்பிரதாய பூர்வமாக அமுலாக்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டின் சர்வதேச தொனிப்பொருள் “யுத்த மோதல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்போம்” என்பதாகும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரால் டிசம்பர் 10ல் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ பிரகடனத்தில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களுக்கெதிரான அச்சுறுத்தல்களைப் பற்றியே வலியுறுததியுள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களுக்கெதிராக இந்நிலைமை ஏற்பட்டால், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பாரிய தடையே ஏற்படும். கடந்த தசாப்தங்களில் மனித உரிமை மீறல்கள் பாரிய அளவில் வியாப்பித்ததேயொழிய குறையவில்லை. யுத்தத்தைச் சாட்டாக வைத்து, பல்வேறு அடக்கு முறைச் சட்டங்களையும் ஒட்டு மொத்த அரச இயந்திரத்தையும் பயன்படுத்தி, அரசியல்வாதிகளும், பொலிசாரும் பாரிய குற்றச் செயல்களைப் போலவே சிறு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசியல் ரீதியில் தமக்கு சவால்விடுக்கக் கூடியவர்களை ஒடுக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யுத்தத்தின் முடிவுடன் இவ்வடக்கு முறையின் தாக்கத்தை முழுச் சமூகமும் உணர ஆரம்பித்துள்ளது. வடக்கு தெற்கு என்ற வித்தியாசம் இன்றி ஒட்டுமொத்த இலங்கைச் சமூகமும் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற கொலைகள் காணமற்போகச் செய்தல் என்பவற்றிற்கு குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலர் இராணுவப் பயிற்சி பெற்றவர்களாவர். எம்முன்னே தீர்க்கப்படாத பல சிக்கல்களை விட்டுச் சென்றிருக்கும் திரு. பாரத லக்ஷ்மன் கொலை செய்யப்பட்டமை இதற்குச் சிறந்த உதாரணமாகும். அரசியல் அதிகாரம், ஆயுதங்களின் சஞ்சரிப்பு, பாதாள உலகம் என்பவற்றிற்கும், அரசியல் எதிர்ப்புக் கிளம்பும் போது அவற்றை நசுக்கிவிடுவதும், ஆட்சியாளர்களின் ஒரே குரலாகும். அச்சுறுத்தல், பீதியை உருவாக்குதல், பணத்தை அள்ளி வீசுதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் குரலை அமைதிப்படுத்துதல் என்பன மிகச் சுலபமாக இடம்பெறுகின்றன. எனவே, சிவில் சமூகத்தில் பாரிய அச்சமே தோன்றியுள்ளது. கறுங்கல்லில் தலையை மோத விட வேண்டாம் என்பதே இவ்வடக்கு முறையின் குரலாகும்.

இத்தகைய சூழலில் பெண்களே மிகவும் நலிவுற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வெள்ளைச் சேலைகளையும் கறுப்பு சேலைகளையும் அணிந்த பெண்களை எதிர் நோக்கும் காலகட்டத்தையே இலங்கைச் சமூகம் இப்போது சந்திக்கின்றது. சட்ட மீறல்களும் ஒடுக்குமுறையும் நல்ல எதிர்காலத்தை உருவாக்கமாட்டாது என்பதையே இப் பெண்கள் கூறும் செய்தியாகும், எதிர்க் கட்கியினர் சிறையில் அடைக்கப்பட்டனர், காணமற்போகச் செய்யப்பட்டனர், படுகொலையும் செய்யப்பட்டனர் என்பதையே இக் காட்சிகள் எமக்கு உணர்த்துகின்றன. இந்த யதார்த்தத்தினாலேயே இன்று வடக்கு தெற்கும் இணைகின்றன. இது தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு நேர்ந்த இடையூறு மாத்திரமல்ல இலங்கையின் ஓட்டுமொத்த அரசியலில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியாகும்.

ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட பெண்கள், தமது காணாமற்போன உறவுகளைத் தேடி அங்குமிங்கும் அலைந்து திரிகின்றனர். காணாமற்போன தனது கணவனுக்கு நீதித் தேடி சந்தியா எக்நெலிகொட நீதிமன்றம் தோறும் ஏறி இறங்குகிறார். அனோமா ஃபொன்சேக்கா, சுமனா பிரேமசந்திர ஆகியோரும் இதே யதார்த்தத்தையே எமக்குக் காட்டுகின்றனர். பாதிக்கப்பட்ட இப்பெண்களின் எதிர்காலம் எத்தகையது? மன்னாரின் லெச்சுமிக்கும், திருகோணமலையின் றிசானா நஃபீக்கிற்கும், நல்லிணக்க ஆணைக்குழு முன்தோன்றி சாட்சி கூறிய சுமார் 200 பெண்களுக்கும் சுபீட்சமான இலங்கை கிட்டுமா!

முனித உரிமைகள் பற்றிய போலித் தகவல்களையும் தரவுகளையும் உள்ளடக்கிய அறிக்கைகளை ஐ.நா. விடமும் சர்வதேச சமூகத்திடமும் சமர்ப்பிப்பது இவ்வரசாங்கத்தின் வழக்கமாகிவிட்டது. யுத்தம் தாய்

நாட்டின் அபிமானம் என்பவற்றை சாட்டாகக் கூறி மனித உரிமைகளைப் பற்றிய தனது பொறுப்புக்களை தட்டிக்கழிப்பது ஆட்சியாளரின் நடத்தையாக மாறி உள்ளது.

முறுபுறம் பெண்களின் உரிமைகள், வீட்டு வன்முறை, பாலியல் வல்லுறவு பற்றி உரிய நடவடிக்கை எடுக்காமல் "எமது கலாசாரம் எம்மவர்" என்ற போலிப் பிரசங்கங்களை அரசு செய்து வருகிறது. ஆண் ஆதிக்கத்தைப்பற்றி பம்மாத்து பேசப்படுகிறது. இவை மூலம் சட்டரீதியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தள்ளிவைத்தே வருகின்றது. எனவே, சட்டம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்து வருகின்றது. அதே சமயம் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீது பகைமை உணர்வையும், கோபத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி சட்டவிரோத நடவடிக்கைகளையே ஆட்சியாளர்கள் ஊக்குவித்து வருகின்றனர்.

2005-2009 வரை தேவைநாடும் மகளிர் நிறுவனத்திலிருந்து (Women in Need) நிவாரணம் பெற்ற பெண்களின் எண்ணிக்கை 219,825 என அறிக்கையிடப்பட்டுள்ளது. இது ஒரு பாரதூரமான நிலைமையாகும். அறிக்கையிடப்படாத எண்ணிக்கை எவ்வளவோ! தினசரி பத்திரிகை அறிக்கைகளுக்கு அமைய பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், குடும்பத்தகராறு காரணமான கொலைகள், கிறீஸ் பூதங்கள், மூலம் பெண்களை துன்புறுத்தும் எண்ணிக்கை எண்ணிலடங்கா, வடக்கில் எதுவித ஆண்துணையுமின்றி இளம் விதவைப் பெண்கள் என்ற வகையில் மீளக்குடியேறும் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு அளவே இல்லை. தற்போது நடைமுறையிலுள்ள இராணுவ ஆட்சி காரணமாக மேற்படி துன்புறுத்தல்களை அறிக்கையிட முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்துள்ளது.

நல்லாட்சி நிலவும் அரசியல் சூழமைவிலேயே மனித உரிமைகளை அனுபவிக்க முடியும்; மனித விழுமியங்களை மேம்படுத்த முடியும் ; ஜனநாயகத்திற்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் வெளியீட்டுச் சுதந்திரத்திற்கும் சந்தர்ப்பம் கிட்டும். பதினெட்டாம் அரசியலமைப்பு அமுலாக்கப்பட்டதன் பின்னர் இலங்கை அரசியல் சர்வாதிகாரத்தை நோக்கியே நகர்கின்றது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு எதிராக ஆளுங்கட்சியின் அட்டகாசங்கள் இதை உறுதிப்படுத்துகின்றது, அவசர அவசரமாக சட்டங்களை அங்கீகரிப்பது மூலம் நாட்டின் அதிகாரத்தை மாத்திரம் அல்லாது வளங்களையும் கொள்ளையிடும் கொள்ளைக்கார அரசாக இலங்கை மாறியுள்ளது.

பெண்களின் உரிமைகளை மனித உரிமைகளாக ஏற்பதற்கு இவ்வரசாங்கம் தயாராக இல்லை. பெண்களின் உரிமைகள் வெறுமனே போசாக்குடைய உணவுப் பொட்டலத்துக்கோ கருத்தரிப்பை ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவிற்கோ, வரையறுக்கப்பட்டுள்ளது. பெண்களின் வகிபாகம் வெறுமனே தாய்மாரின் அந்தஸ்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாக அரசாங்கம் பாராமுகமாகவே இருந்து வருகின்றது. பெண்கள் தொடர்பாக பிற்போக்குத்தனமான கருத்துக்களைக் கொண்டிருப்பதால் அரசாங்கம் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான திருத்தச் சட்டங்களை கொண்டுவராமல் தட்டிக்கழித்து வருகின்றது.

சட்டத்தை மதிக்கும் அரசியலை நிலைநாட்டுவோம்!
பெண்களின் உரிமைகளை மனித உரிமைகளாக ஏற்றுக் கொள்ளும் சமூகத்தை நோக்கி முன்னேறுவோம்!
அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 30% வீதத்தால் கூட்டு!
பெண்களின் சுயகௌரவத்தையும் சம உரிமைகளையும் பாதுகாக்கும் அரசியலை பிரார்த்திப்போம்!

## பெண்களுக்கான அரசியல் கழகம்

இல 139/A, ஆனந்த ராஜகருணா மாவத்தை,
<u>கொழும்பு -10</u>

டயிட்டஸ் பர்ணாந்து ஆகிய என்னால் பெண்களுக்கான அரசியல் கழகத்தின் சார்பில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல 139/A, ஆனந்த ராஜகருணா மாவத்தை, கொழும்பு -10